செய்தி வெளியீடு எண் : 35 நாள் : 28.03.2018

***தேனி மாவட்டம்,***
***செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில்,***
***அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி***
***தமிழக அரசின் சிறப்பு சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியினை***
***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்***
***திறந்து வைத்து பார்வையிட்டார்.***

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தில் தமிழக அரசின் உத்தரவின்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி குறித்த தமிழக அரசின் சிறப்பு சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியினை இன்று (28.03.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழக அரசின் உத்தரவின்படி, தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பில் அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி குறித்த தமிழக அரசின் சாதனை விளக்க சிறப்பு புகைப்படக்கண்காட்சியில் தமிழக அரசின் வளர்ச்சித்திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள், அரசின் நலத்திட்ட உதவிகள் மற்றும் மாவட்டத்தில் நடைபெற்ற அரசின் முக்கிய நிகழ்வுகள் குறித்த புகைப்படங்களை ஒருங்கிணைத்து பொதுமக்கள் அறிந்து தெரிந்து கொள்வதற்காக தமிழக அரசின் சாதனை விளக்க சிறப்பு புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

இக்கண்காட்சியினை நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் பார்வையிட்டு கண்டுகளித்தனர். பொதுமக்கள் தெரிவிக்கையில், இக்கண்காட்சி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை எளிதான முறையில் அறிந்து தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது எனத்தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், மகளிர் திட்ட அலுவலர் திரு.கல்யாணசுந்தரம் அவர்கள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி வசந்தி அவர்கள், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் திரு.முருகேசன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.சேதுராமன் அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.அபிதாஹனீப் அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி உமையாள் அவர்கள், தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் (பொ) திரு.ராஜாராம் அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**